புரசைவாக்கம்- பெரம்பூர் பகுதிகளில் மெட்ரோ ரெயிலுக்கு

# தனியாரிடம் இருந்து குறைந்த அளவு இடங்களே கையகப்படுத்தப்படும்

## புகைப்பட கண்காட்சி நிறைவு விழாவில் நிர்வாக இயக்குனர் தகவல்

சென்னை, ஆக.31–

சென்னை மெட்ரோ ரெயில்வேயின் 2–வது திட்ட வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், புரசைவாக்கம், டவுட்டன் மற்றும் பெரம்பூர் பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள தனியார் நிலங்களில் குறைந்த அளவு இடங்களையே கையகப்படுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது என்று மெட்ரோ நிர்வாக இயக்குனர் தெரிவித்தார்.

### புகைப்பட கண்காட்சி நிறைவு விழா

சென்னை வடபழனி மெட்ரோ ரெயில் நிலையத்தில் மெட்ரோ ரெயில் புகைப்பட கண்காட்சி நிறைவு விழா நடந்தது. இதில் சிறந்த புகைப்படங்களை எடுத்தவர்களுக்கு பரிசுகளை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக இயக்குனர் பங்கஜ்குமார் பன்சால் வழங்கினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் 107.55 கிலோ மீட்டர் தூரம் கொண்ட 2–வது திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துதல், சீரமைப்பு, விரிவான வடிவமைப்பு மற்றும் மண் சோதனை போன்ற ஆரம்ப கட்டப்பணிகள் அனைத்தும் ஒரே நேரத்தில் நடந்து வருகிறது.

இந்தப்பணி ஒரு ஆண்டில் நிறைவடைய உள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பாக அதனுடைய வடிவமைப்புக்கு ஏற்ப மாற்றங்கள் செய்ய உள்ளோம்.

### குறைந்த அளவு நிலம்

தற்போது நிலம் கையகப்படுத்துவதில் 3–ல் ஒரு பங்கு அல்லது 4–ல் ஒரு பங்கு இடத்தை குறைத்து கையகப்படுத்த திட்டமிட்டு உள்ளோம். அதாவது கண்டறியப்பட்ட நிலத்தில் குறைந்த அளவு இடங்களை (25 சதவீதம் மட்டுமே) கையகப்படுத்தி நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில் பணிகளை தொடங்க திட்டமிட்டு உள்ளோம்.

ஆனால் சீரமைப்பில் (அலைன்மென்ட்) எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இந்த நடவடிக்கை மூலம் குடியிருப்பு வாசிகளுக்கு நிவாரணம் அளிப்பதாக இருக்கும். இந்த திட்டத்துக்கான ஒப்பந்தப்புள்ளி வரும் 2019–ம் ஆண்டு மத்தியில் கோர இருக்கிறோம்.

### 800 பேருக்கு நோட்டீஸ்

3 மற்றும் 5–வது வழித்தடத்தில் மெட்ரோ ரெயிலுக்கான பாதை அமைப்பதற்காக 50 கிலோ மீட்டர் தூரம் கொண்ட பகுதியில் 10.55 லட்சம் சதுர மீட்டர் கொண்ட அரசு மற்றும் தனியார் இடங்கள் கண்டறியப்பட்டது. இதற்காக 800 நில உரிமையாளர்களுக்கு இடங்களை கையகப்படுத்துவதற்காக நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

புரசைவாக்கம், டவுட்டன் மற்றும் பெரம்பூர் ஆகிய இடங்களில் அதிக அளவு தனியார் இடம் கையகப்படுத்த முடிவு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் கட்டுமான செலவும் அதிகரிக்கும் என்பதால் குறைந்த அளவு இடத்தை கையகப்படுத்த முடிவு செய்து உள்ளோம்.

மெட்ரோ ரெயிலின் முதல் திட்டத்தில் 90 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் தனியார் நிலங்களை கையகப்படுத்த திட்டமிட்டு இருந்தோம். ஆனால் பல்வேறு நவீன தொழில் நுட்பங்களை புகுத்தி சுரங்க ரெயில் நிலையங்களில் நீளத்தையும், அகலத்தையும் குறைத்தோம். இதன் மூலம் 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவு மட்டுமே நிலம் கையகப்படுத்தப்பட்டது.

### டிசம்பரில் போக்குவரத்து

ஏ.ஜி–டி.எம்.எஸ்.– வண்ணாரப்பேட்டை இடையே தற்போது டீசல் என்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடந்து வரும் நிலையில் வரும் அடுத்த மாதம் (செப்டம்பர்) இறுதியில் இந்தப்பாதையில் பாதுகாப்பு ஆணையர் தலைமையில் சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது.

இதனை தொடர்ந்து டிசம்பர் மாதம் இந்தப்பாதையில் போக்குவரத்து தொடங்கப்படும். எனவே சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பயணிகளின் வரத்து அதிகரிக்கும்.

எனவே இந்த ஆண்டு இறுதியில் கூடுதலாக 2 வழிகள் திறக்கப்பட உள்ளன. தற்போது இந்தப்பாதையில் உள்ள வண்ணாரப்பேட்டை, ஐகோர்ட்டு மற்றும் மண்ணடி ஆகிய 3 ரெயில் நிலையங்களில் நடந்து வரும் மின்சாரப் பணிகள் இந்த வாரத்தில் நிறைவு பெற உள்ளது.

சென்னை மெட்ரோ ரெயிலின் முதலாவது விரிவாக்கமான வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரெயில் போக்குவரத்துக்கான பணிகள் போர்க்கால அடிப்படையில் நடந்து வருகிறது.

இந்தப்பணிகள் வரும் 2020–ம் ஆண்டு நிறைவடைந்து போக்குவரத்து தொடங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.